செ.வெ.எண்: 95/2017 நாள்: 03.02.2017

# தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாம் - 2017

இந்திய அரசு 06-02-2017 முதல் 28-02-2017 வரை 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள்/ மாணவர்கள் மற்றும் மாணவிகள் அனைவருக்கும் தட்டம்மை ருபெல்லா (Measles Rubella) தடுப்பூசி போடப்பட உள்ளது. முதற்கட்டமாக இது தமிழ்நாடு, கர்நாடகம், புதுச்சேரி, லட்சத்தீவுகள் மற்றும் கோவாவில் நடத்தப்பட உள்ளது. தட்டம்மை - ருபெல்லாவால் ஏற்படும் நோய் மற்றும் இறப்பு விகிதத்தை குறைப்பதே இதன் நோக்கமாகும்.

9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இதற்கு முன் இவ்வகை ஊசி போடப்பட்டிருந்தாலும் தடுப்பூசி முகாம் நடைபெறும் நாட்களில் தடுப்பூசி போடப்பட வேண்டும்.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளி, தனியார், உறைவிடப் பள்ளிகளிலும், பள்ளி செல்லா குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களிலும் மற்றும் சிறப்பு தடுப்பூசி மையங்களிலும் தட்டம்மை - ருபெல்லா தடுப்பூசி போடப்படும். ஓவ்வொறு பள்ளிகளில் உள்ள ஒருங்கிணைப்பு ஆசிரியர் மூலம் இப்பணி சுமூகமாக செயல்படுத்தப்படும்.

தற்போது உள்ள தடுப்பூசி அட்டவணையின்படி தட்டம்மை முதல் தவணை 9 மாதம் முடிந்த குழந்தைகளுக்கும் தட்டம்மை இரண்டாம் தவணை 16-24 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கும் போடப்படுகிறது. அது மார்ச் மாதம் முதல் மாற்றப்பட உள்ளது. அதாவது தட்டம்மை - ருபெல்லா தடுப்பூசி முகாம் முடிவடைந்த பிறகு தற்போது உள்ள தட்டம்மை தடுப்பூசி (Measles) தட்டம்மை ருபெல்லா இணைந்த ஒரே தடுப்பூசியாக மாற்றப்படும்.

தட்டம்மை ருபெல்லா தடுப்பூசி முகாம் நான்கு வாரங்களாக பிரித்து நடைபெற உள்ளது. முதல் வாரம் அனைத்து பள்ளிகளிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வாரம் பள்ளி செல்லா குழந்தைகளுக்கும் நான்காம் வாரம் தடுப்பூசி போடாமல் விடுபட்ட குழந்தைகளுக்கும் போடப்படும்.

இவ்வகை ஊசி 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு முறை உபயோகிக்கப்படும் ஊசியினைக் கொண்டு 0.5 ML அளவு வலது கையில் உள்ள தோலுக்கு அடியில் நன்கு பயிற்சி பெற்ற கிராம சுகாதார செவிலியர்கள் மூலம் போடப்படும்.

தடுப்பூசி முகாமிற்காக அனைத்து மருத்துவர்கள் மற்றும் பாரா மெடிக்கல் பணியாளர்கள் அனைவருக்கும் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகள் அனைத்தும் பாதுகாப்பான முறையில் (Cold Chain) தடுப்பூசி முகாம்களுக்கு எடுத்து செல்லப்படும். தடுப்பூசி முகாம், போலியோ முகாமைபோல் வீடு வீடாக சென்று போடப்பட மாட்டாது.

நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 1224 பள்ளிகள்,1401 சத்துணவு மையங்களில் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. மேலும் இம்முகாம்கள் மூலம் 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள 444603 பள்ளி செல்லக் கூடிய மற்றும் பள்ளி செல்லாத குழந்தைகள் பயன் அடைவார்கள்.

ஆதலால் இம்முகாம் நடைபெறும் நாட்களில் பெற்றோர்கள் தங்கள் 9 மாதம் முதல் 15 வயது வரை உடைய குழந்தைகளுக்கு மறவாமல் தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொள்கிறார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.